ஓரடி மண்ணால் உயர்ந்து நிற்குது எங்கள் தமிழ் ஈழம் எங்கள் தமிழ் ஈழம் 2
அது போராடி மடிந்த மாவீரர்களின் பெரும் தியாகம் 2
அடி கொள வேண்டிய சந்தண மாந்தர்கள் விதையாக புதைந்தாரே
விடியலுக்காகவே உணர்வோடுயிர்களை தேசத்துக்கு ஈந்தாரே

இன்னும் இவர் நெஞ்சால் எங்களது மண்ணைத் தாங்கியே உறங்குகிறார் 2
கண்ணிரண்டும் கரைந்து மலர் தீபம் ஏற்றி ஆண்டுதோறும் வணங்குகிறார் 2
மண்ணில் இவர் சிந்திய குருதியால் நாடே சிவந்து கிடக்கிறது 2
இவர் கண்ணுறங்கும் கல்லறையில் தமிழ் ஈழம் எனும் ஒலி
இசைந்து கேட்கிறது இசைந்து கேட்கிறது

ஓரடி மண்ணால் உயர்ந்து நிற்குது எங்கள் தமிழ் ஈழம் எங்கள் தமிழ் ஈழம்
அது போராடி மடிந்த மாவீரர்களின் பெரும் தியாகம்

எங்களோடு நேற்று உண்டு பேசி மகிழ்ந்து வீதி உலா வந்தவர்கள் 2
எங்கள் சங்கத் தமிழ்ஈழ தேசியத் தலைவன் நீதி வழி நடந்தவர்கள் 2
சங்ககாலம் படைத்த புறங்களை மீண்டும் புதுப்பித்துப் போனாரே 2
மக்காள் உங்கள் கால் பாதம் உறைவிடம் தன்னில் மிதியாமல் பதிப்பீரே 2

ஓரடி மண்ணால் உயர்ந்து நிற்குது எங்கள் தமிழ் ஈழம் 2
அது போராடி மடிந்த மாவீரர்களின் பெரும் தியாகம்

மாலை சர்ப்பம் அணிந்த விசம் உண்ட கண்டனையும் வென்றுதான்
நின்றார்கள் 2
பெரும் குலையாத மலை போல் அழியாத சரிதமாய் ஞாலமதில்
நிலைப்பார்கள்2
அலைகடல் வானும் நதிக்கரை காற்றும் இவர்களை பறைசாற்றும்2
பூஞ்சோலை மாடம் சாலை சந்தி எல்லாமே இவர்களின் பேர் விளங்கும்2

ஓரடி மண்ணால் உயர்ந்து நிற்குது எங்கள் தமிழ் ஈழம்
எங்கள் தமிழ் ஈழம்
அது போராடி மடிந்த மாவீரர்களின் பெரும் தியாகம் 2
அடி கொள வேண்டிய சந்தண மாந்தர்கள் விதையாயே புதைந்தாரே
விடியலுக்காகவே உணர்வோடுயிர்களை தேசத்துக்கு ஈந்தாரே